நேரம் இல்லை. ஏனென்றால் நிறைய உறுப்பினர்களைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆகவே, நீங்கள் எவ்வளவு தூரம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறீர்களோ அவ்வளவு தூரம் நான் அனுமதிப்பேன். மேலும், மாண்புமிகு அமைச்சர்கள் அதற்கு பதில் சொன்னால் அதிக நேரமாகும். அதனால் உறுப்பினர்கள் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். கவன ஈர்ப்பு அறிவிப்பாகக் கொடுத்ததை நான் ஏற்கெனவே அனுப்பிவைத்திருக்கிறேன். அதையே நீங்கள் எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். இல்லையென்றாலும், இப்போது அவர்கள் பதிவு செய்வதையும் நான் அனுப்பிவைக்கின்றேன். அவற்றை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அவர்களது நடவடிக்கைக்கு உட்படுத்திக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சென்னை, யானை கவுனி பாலப் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர் பாபு அவர்கள். ஒரு நிமிடத்தில் முடிக்க வேண்டும். மற்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்புத் தர வேண்டும். மற்ற நேரம் மாதிரி இன்றைக்கு இல்லை.*

முற்பகல் 10–10

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நயினார் பாலம் என்று அழைக்கப்படுகின்ற யானைக் கவுனி பாலம் கடந்த ஆண்டு 27–12–2016 அன்று மூடப்பட்டது. அந்தப் பாலத்தின் விரிவாக்கத் திட்ட அறிக்கைக்கூட இரயில்வே துறையால் இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. கடந்த 27–6–2017 அன்று மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் இரயில்வே துறைக்கு இந்தப் பாலத்திற்குண்டான முழுத் தொகையையும் மாநகராட்சியே ஏற்றுக்கொள்ளும் என்று ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கின்றார். ஏற்கெனவே உள்ள நடைமுறையின்படி, இரயில்வே* portion *போக மீதி இருக்கின்ற இடங்களுக்கு மாநகராட்சித்தான் பணத்தைச் செலுத்தும். 50:50 சதவிகிதம் என்ற அளவிலே அதைப் பங்கு பிரிப்பார்கள். ஆனால், இந்த முறை அந்தப் பாலம் மூடப்பட்டு ஏற்கெனவே எட்டு மாதங்களாகியிருக்கின்றன. அதன் சுற்றுப்புறத்தில் இருக்கின்ற அனைத்துப் பகுதிகளிலும் போக்குவரத்து மூச்சுவிட முடியாத அளவிற்கு நெருக்கடியை*

ஏற்படுத்தியிருக்கின்ற இந்த நேரத்தில், அந்தப் பாலத்தினுடைய விரிவான திட்ட அறிக்கையை உடனடியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு, போதும் உட்காருங்கள்; அரசின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள்.

(இ) அண்ணா நகர் தொகுதி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன் அவர்கள்.

திரு. எம்.கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணியடித்து விடாதீர்கள்; நான் சீக்கிரமாகப் பேசி முடித்துவிடுகிறேன். நான் எனது கன்னிப் பேச்சை தொடங்குவதற்கு முன் எனது பெருமைமிகு பெற்றோர்களான திரு. கோதண்டபாணி நாயுடு–திருமதி கிருஷ்ணவேணி அம்மாளுக்கு எனது வணக்கத்தையும், மரியாதையையும் செலுத்துகின்றேன். இத்தருணத்தில் என்னை இச்சட்டமன்றத்தில் அமர வைத்த தமிழினத்தின் மூத்த தலைவரும், சட்டமன்றத்தில் தொடர்ந்து வெற்றிப் பெற்று வைரவிழா கண்ட தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி), அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர் சகோதரர் திரு. அன்பழகன் அவர்களுக்கும், எதிர்க்கட்சிக் கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைத் தேர்ந்தெடுத்த எனது அண்ணா நகர் தொகுதி மக்களுக்கும், எங்கள் பகுதி கழக நிருவாகிகள் மற்றும் ஏனைய தோழமைக் கட்சித் தொண்டர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தந்தை பெரியார், கர்ம வீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்கள், எங்கள் இனமான பேராசிரியர், எங்கள் செயல் தலைவர் அண்ணன் தளபதி உள்ளிட்ட எல்லா அரசியல் தலைவர்களும் எங்கள் இல்லத்திற்கு வந்து சென்றுள்ளனர். எனது தந்தையைப் போலவே நானும் பொது வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டவன். எனக்கு இளமை பருவத்திலிருந்தே அரசியல் ஆர்வம் அதிகம். நான் கலைஞர் அவர்களால் கவரப்பட்டு,